**செய்தி வெளியீடு – 842** நாள் – **16.11.2009**

**கும்மிடிப்பூண்டி அருகே 4 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில்**
**பிரான்ஸ் நாட்டு மிச்சலின் நிறுவனத்தின் புதிய டயர் தொழிற்சாலை!**

# முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து!

பிரான்ஸ் நாட்டைச் சார்ந்த மிச்சலின் நிறுவனம் உலகின் மிகப்பெரிய டயர் உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றாகும். 19 நாடுகளில் 1 இலட்சத்து 21 ஆயிரம் பணியாளர்களுடன் ஆண்டுக்கு 190 மில்லியன் டயர்களை உற்பத்தி செய்யக் கூடிய 69 தொழிற்சாலைகளையும், 3 தொழில்நுட்ப மையங்களையும், 2 ரப்பர் தோட்டங்களையும் கொண்டுள்ள மிச்சலின் நிறுவனம் 2007ஆம் ஆண்டில் 1079 பில்லியன் ரூபாய் அளவிற்கு விற்றுமுதல் செய்துள்ளது.

இத்தகைய மிகப் பெரிய மிச்சலின் டயர் நிறுவனம் தமிழ்நாட்டில் அமைந்துள்ள தொழில் முதலீடுகளுக்குரிய சாதகமான சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டத்தில் அமையவிருக்கும் சிப்காட் தொழில் வளாகத்தில் 290 ஏக்கர் நிலப்பரப்பில் டயர் தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றினை அமைத்திட முடிவு செய்துள்ளது. ஒருங்கிணைந்த மோட்டார் வாகனத் திட்டங்களைத் தவிர்த்து, மிச்சலின் நிறுவனம் ஒரே இடத்தில் அமைக்கும் இந்த மிகப் பெரிய டயர் உற்பத்தித் திட்டம், 7 ஆண்டு காலத்தில் 4000 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகள் செய்யும்; 1500 பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகள் வழங்கும். மேலும், கும்மிடிப்பூண்டி வட்டாரத்தில் தொழில்கள் வளர்ச்சி அடைவதற்கான புதிய ஊக்கத்தினையும் இத்திட்டம் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில், துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், இந்த மிச்சலின் டயர் உற்பத்தித் தொழிற்சாலை அமைக்கப்படுவதற்காக இன்று (16.11.2009) நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பாக தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு எம்.எப். பாருகி, இ.ஆ.ப. மிச்சலின் இந்தியா தமிழ்நாடு டயர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் சார்பாக அந்நிறுவனத்தின் ஆப்பிரிக்கா இந்தியா மத்தியக் கிழக்கு நாடுகளுக்கான தலைவர் திரு. பிரசாந்த் பிரபு ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வின்போது, மிச்சலின் நிறுவனத்தின் இந்திய திட்ட இயக்குநர் திரு. நிகோலஸ் ப்யூமோன், ஆப்பிரிக்க இந்திய மத்தியக் கிழக்கு நாடுகளுக்கான விற்பனைத் துறைத் தலைவர் திரு. வெங்கடேஷ் ரங்காச்சாரி, வரி மற்றும் சட்டத்துறை துணைத் தலைவர் திரு. ஹாக்சென்சான், திட்ட மேலாளர் (அனுமதிகள்) திரு. டாமினிக் கெலோபின், பொது ஆலோசகர் திருமதி. நந்திதா குரானா ஆகியோரும்; தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித் துறை முதன்மைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப, சிப்காட் நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் என். கோவிந்தன். இ.ஆ.ப., தமிழ்நாடு தொழில் வழிகாட்டி அமைப்பின் செயல் துணைத் தலைவர் திரு. எம். வேல்முருகன், இ.பொ.ப. ஆகியோரும் உடன் இருந்தனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.